895

முஸ்லிம் முனைஸ்பீர்

# புகழ்ப்பா மஞ்சரி.

(௦)

இஃது

நாகபட்டணம்,

மீராப்பள்ளி மதிரஸாவின் உஸ்தாது மவுலானா மவுலவி முப்தி ஹாஜி

ஹஜரத்து செய்யிது முகம்மது ஆலிமுல்காமிலுல்பாலிஹு,

ஷைகுனல் அல்லாமத்து அவர்களின் குமாரரும்,

அமுல்கரி, கொடிக்கால் வாயிலின், என்னும்

பட்டவர்த்தனரும் அறபியிலும்

தமிழிலும் பல உன்னத கிரந்தங்கள் செய்தச்சிட்டு வெளியிட்டவரும்

பலசங்கத்து அங்கத்தினருமாகிய

அல்லாமத்து மவுலானா மவுலவி முப்தி ஹஜரத்து

## அஹ்மதிப்ருஹீம் ஆலிம்

ஸாஹிபு அவர்கள் இயற்றியது.

ஸ்காட்டிஷ் பிரான்ச் பிரஸ்,

நாகபட்டணம்.

1925.

97:417
N25
180895

முபஸ்மிலா முஹஸ்பிலா

# புகழ்ப்பா மஞ்சரி.

——(o)——

இஃது

நாகபட்டணம்.

மீராப்பள்ளி மதுரஸாவின் உஸ்தாது மவுலானு மவுலவி முப்தீ ஹாஜி

ஹஜரத்து செய்யிது முகம்மது ஆலிமுல்காமிலுல் பாலிஹு,

ஷைகுனல் அல்லாமத்து அவர்களின் குமாரநும்,

அபுல்கைர், கைருல் வாயிலீன், என்னும்

பட்ட வர்த்தனரும் அறபியிலும்

தமிழிலும் பலஉன்னத கிரந்தங்கள் செய்தச்சிட்டு வெளியிட்டவரும்

பலசங்கத்து அங்கத்தினருமாகிய மவுலானு மவுலவி, முப்தீ, ஹஜரத்து

## அஹ்மதிப்றாஹீம் ஆலிம்

ஸாஹிபு அவர்கள் இயற்றியது.

---

ஸ்காட்டிஷ் பிரான்சுபிரஸ்

நாகபட்டணம்,

1925.

## சிறப்புப்பாயிரம்.

இஃது

## நாகபட்டணப்

## ம. ஹமீது சுல்தான் ஆலிம் புலவர் அவர்கள்

## இயற்றியது.

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கடல்கிடந்துடுத்துமிப் புவிமுதற் படைப்பெலாங்,
  காப்பவன் றனையுணர்த்தி,
காட்சியார் மோட்சங்கை யாட்சியாம் பெறவழி,
  காட்டிரட்சிக்குமாறு,
கனகபொன்னகரெனு மக்கமா நகரினிற்,
  கதிர்மதி யெனவுதித்து,
கரங்கொளு மண்கொடு அபுஜஹில் படைவெலும்,
  காத்திமுல் அன்பியாவின்,
காரண வர்ப்புதச் சரிதையி லெடுத்திவண்,
  கவலுவான் றனிபுகொண்டு,
காண்டொறும் காணரும் சொற்சுவை பொருட்சுவைக்,
  காணலாமீதென்ன,
கற்ற விற்பனர்புகழ் புலவர்கண் மணியெனும்,
  கவிராஜர் நிதமுநோக்கி,
கண்டலை யிற்கொளப் புகழ்ப்பா மஞ்சரியெனுங்,
  கதியருள் நூற் செய்தானல், 1/4
இடரிருள் குபிர்குல மறுத்தினி திசுலாத்தி,
  னியல்வழி காட்டிநிற்கும்,
இன்மறை யகப்பொருள்புறப்பொருள் யாவையும்,
  எடுத்தினிதெவர்க்குங் கூற
இல்மெலா முறைமை போற்கற்றுணற் உற்றுசீ
  ரிலங்குமிந்நாகை நகரில்
ஏழின் மீராப்பள்ளிமுதர்றிஸாய் பதினன்கு
  இல்மை யாவர்க்கும்பயின்றோர்
எனக்குமற்றேனோர்க்கு முறைபோல பலவகை
  இல்மூங் கற்பிக்கலானோர்
எங்கெங்கும் உஸ்தாதெனப் பெயர்பெற்றுமே
  ரிசைக்குமோர் முப்தியானோர்

இருமையும் பெருமையாரருமையின் மக்காவிற்
கெழுந்தருளும் ஹாஜியானோர்
இயாவருந்துதி ஹாதி செய்யிது முகம்மதெனு
மியற்பெயர் ஆலிமானோர் ½
திடமன வாக்கொடுகாயமுமொன்றுற
செய்யு நற்றவத்தின் பாலன்
தீனவர் கொண்டாட குபிரவர் திண்டாட
தீன்வழி கூறுநாவான்
திக்கெலாம் பிரசங்கி பிரசங்கியென்னபேர்
திகழ்வுறக்கொள்ளும்பேரான்
தித்திக்க ஒவ்வொரு ஜும் ஆவிலும் வஃலு
சிதைவிலா துரைக்கு நீரான்
தெளியசொல் வஃலினில் இவரது சொற்கிணை
தேடற்கரிதென் னுந்தகையான்
செப்புமிவர் தந்தையுழிகல்வியாம் கற்கயில்
சிறப்பவென்னோடுகற்றோன்
தீதிலா திலக்கணமிலக்கிய நூற்பல
செய்து வெளியாக்குமதியோன்
ஜெகமெலாம்புகழிசு லாமுறைபோதித்து
திருநாகைதன்னில் வளர்வோன்
படர்புகழ்பெறுகவி நூற்பலசெய்தெக்கும்
பரவசெய்வித்த பின்னும்
பார்ப்பவர்பூரிக்கும் கேட்போரானந்திக்கும்
பதவிலக்கணம் பொருந்தும்
படிக்கு முற்கூறுபாமஞ்சரி எனு நூலிற்
படியினில் விளங்கியுள்ள
படிப்பினில் உளவிசையாவுமிப்பாவினிற்
பதிவென விளக்கிகாட்ட
பல்விசைதனைக்கொண்டு நல்விசையாமிதென
பக்தியின் கோர்வைசெய்தான்
பலன்பெறுவழிகாட்டு நலந்தரு ஆலிமாய்
பாவலர்தனக்கரசுமாய்
பார்படு நலத்திற்கு தந்தையரெனப் பொருள்
பமேபுல்கைருமாகி
பருதிபோல் வரும்அஹ்மதீப்றஹீம் சாஹிபெனும்
பலன்றரும் பாவல்லோனே.

முற்றிற்று

## சாத்து கவிகள்

இஃது

காரைக்கால் மகா-ள-ஸ்ரீ மீ முகம்மதபூபக்கர் ஆரியரவர்களியற்றியது.

வெண்பாக்கள்:—

திருமக்கா க்ஷேத்திரத்தின் றிவ்யநபி யென்ன,
வருமக்கா ருண்யரடி வாழ்த்தி—இருமக்கா,
சீர்புகழ்ப்பா மஞ்சரியை செப்பினனைகைவளர்,
பார்புகழ்ப்பா வாணன் பறிந்து.

சாற்றுபதி ஞன்கில்மை தஹ்ஸீல்செய் தோர்தமிழை,
சாற்று மிலக்கனத்தின் சாரமுண்டோன்—சாற்றுங்,
கவிக்குரிசி லேறென்னும் காளமேகத்தின்,
கவிக்குமே லாமிக் கவி.

ஆசுமது ரஞ்சித்ர மாழ்ந்தவித் தாரமெனப்,
பேசுகின்ற நாற்கவிசெய் பேராளன்—றேசுலவுஞ்,
செய்யிதுமு கம்ம தெனுமல்லா மாவீன்ற,
வய்யம் புகழ்நா வலன்.

ஆலிம்க ளின்றிலதம் அஹ்மதிப்ற ஹீம் அபுல்கைர்,
ஆலி மெனப்பே ரணிந்தோன்—ஆலிம்,
மகிதலத்தி லோங்கி வளர்வனபோல் சீர்த்தி
மகிதலத்தி லோங்குவித்து வான்— (முற்றிற்று)

இஃது

வீரசோழராஜன்பட்டணம் காஜீகத்தீபும், அறபி, பார்ஸி, ஹிந்துஸ்தானி, தமிழ், ஆதிய பலபாஷாவல்லுனருமாகிய நாற்கவி நாவலர் மவுலவி ஹாஜீத்து அ. செய்கு முகம்மது ஆலிம்சாஹிபு அவர்கள் செல்லியது

வெண்பா

பண்டிருந்த வள்ளுவனர் பாவலரு மின்றிருந்தால்,
வண்டியிழு மென்றவரை வாதிப்பார்—நன்றிதரும்,
ஆசுகவி அஹ்மதிப்ற ஹீம்ஆலீம் சாஹிபு,
பேசுங் கவிப்பயனைப் பெற்று.

இஃது

தஞ்சை சமஸ்தான மஹா வித்துவான் கல்விக்களஞ்சியம் ஹரிசிங்கு புலவரவர்கள் சொல்லியது.

வெண்பா

சித்திரமும் நன்றாய் சிரமசைக்கு மோங்கியகல்,
லுத்திரமும் நீரா யொழுகுமே—இத்தரையில்,
வந்த அபுல் கைர்ஆலிம் வாய்திறந்து சொற்றமொழிற்,
செந்தமிழைக் கேட்டதினத்தே

இதமது.

மன்றத் தபுல்கைரு வார்த்தைவளங் சேட்டஞ்சி,
குன்றத் தொழித்தான்சேய் கும்பமுனி—சென்று கஞ்சன்,
நாவிலொழிந்தாள்வாணி நற்கதிரோன் சேண்சென்றான்
பூவிலொழிந் தான்சேடன் போய்.

முற்றிற்று.

(புகழ்ப்பாமஞ்சரி)

வெண்பா

முக்கனியு மற்று முதிர்க்கனியும் பூத்திலங்கு,
மக்கநக ராழு மஹ்மூதே—துக்கமற,
வெற்கருளைத் தந்து வெழிலுடலின் கூறோத
நற்கதிய ருள்வீர் நயந்து.

(முத்தொன்றிருக்கு தெண்சாண் என்ற விராகம்)

பதம் பல்லவி

ஞானமறிந் துணர்ந்த ஞாலப்ரசித்தமுள்ள, (I)
மோன குருக்களிட மீளும் மீளும்
சீனமானுலுஞ்சென்று சித்தியடைக்கல்வி
தீரவறியென்றதை கேளுங் கேளும்

ஊனகந்தன்னிற்சில, வுரையாசிரியர் கூறு
முன்மை சுனனஹிம்மத், தருதிப் பொருளைத்தேறும்
வானமலக்குகளை, வல்லவன் நோக்கி நேரும்,
வாகான ஆதமுக்கு, வணங்கச்சொன்னதைப் பாரும்
ஈனமனுக்களைப் போலீதிலிருந்திடாம
விதிகாசமுடன் விடைதனை யறிவீர் ஞானமறி

உடலறியும் வகையின் ஒழுங்குகளுரைக்கின்ற, (2)
உயரிய குத்துபதிற் சொல்லுஞ் சொல்லுங்,
கடமதிற்பெற்றோரினுங், கத்தரின்றாதர் பங்கு
மெத்தனை யென்றுணர்ந்து செல்லுஞ் செல்லும்,
கடன்வழியாய்பிதற்றற், காரணமிதுவாமோ?
கண்டறியாமல்விள்ளக், கருதுவது மெய்யாமோ?
கடவதைத் தெரிந்துபின், கதைக்குதல் சரியாமோ?
கலக்கல்லாஹு ஆதமாக், கருத்தைமறைக்கலாமோ?
கடலோலம்போல் நீரெண்ணிக் கத்திக்கதறிடாமல்
கடமைப்பொருளறிந்து கடைத்தேறுவீர் ஞானமறி

நினைவின்றிபேச்சுமில்லை கேர்பார்வை மூச்சுமில்லை, (3)
தனையதைக்காட்டினேனே தேறுந் தேறுங்,
கனைகேள்வியுயிர்மற்றுங், காவலறிவுமொன்றுங்,
காண்கிலேனிதை நன்றாய்ப்பாரும் பாரும்,
மூனைமழுக்காமலறி முதிய நாஸூத்ததனை,
முன்னேறு மலக்கூத்தை முகிர்ஜபரூத்ததனை,
சுனைதவித்தாது நல்ல, சுருதிலாஹூத்ததனை,
சுத்தமுறவுணர்ந்து, சொல்லுமிக் கூற்றதனை,
மனைவிமக்கட் பொருள்கண் மாய்கையிற் சிக்கிடாமல்,
மன்கூஸ மஅக்கூசை தெளிந்துணர்வீர் ஞானமறி

அம்மாரா தேகமதி லமைந்த விடமெதென்று (4)
மடுத்தலவ்வாமாவையும் நோக்கும் நோக்கும்
செம்மைமுல்ஹிமா பின்னுஞ் சேர்ந்த முத்துமஇன்னா,
தேர்ந்தப்பொருள்களை யுன் தாக்கும் தாக்கும்
அம்முயரில்முல்யக்கீன் ஐனுல்யக்கீனு மென்னா?
அருமைஹக்குல்யக்கீனின் அகமியந்தன்னை மன்னா?
நீம்புங்கமாலுல்யக்கீன் நன்னிலையாய்ந்த தென்னா?
நடுநிலையோடிவைக்கு நவிலும்விடையை நன்னா?
பொம்மைக்கூத்தாடி யாடும் போதரைப்போலில்லாமல்
பொருமையுறவுடலின் பொருளறிவீர் ஞானமறி

தன்ஜீஹாதஷ்பீஹா, தன்ஜீஹாமஹ்லென்னுந், (5)
    தந்திரமந்திரத்தைப் பேணும் பேணும்,
இந்தீலின் சுடர்போல வெந்தவிடத்திலவை,
    பந்தாடி நிற்கு மெனக்காணுங் காணுங்,
குந்தக்கன்ஜன் மஹாபிய், யாத்தியின்கோலமெது?
குன்னென்கு முன்னறங்கு, குருகியவாலமேது?
முன்னின்றவஹாமது, முச்சுடர்மூலமிது?
முழுதுமறிந்தவனே காயவிஸ்தூலப்பொது?
    கன்னன்மறையிற் சொன்னக், கருத்தை மறைத்திடாமல்
கருதிஅமானத்தென்ன? வெனன்யறிவீர் ஞானமறி,

தாத்துசிபாத்தஸமா, சாற்றுமஹாதியத்து, (6)
    சார்ந்தவஹதத்தையும் நோக்கும் நோக்கும்
ஆத்தநிறைந்தவாஹிதிய்யா, அருமைமக்கா,
    மாய்ந்து விடைகளையுள் தாக்கும் தாக்கும்
பாத்திரமறிந்துபின், பயின்றிடுமறிவதை,
பாவிங்கு தனக்குநீர், பகமதைப்பகர்வதை,
மூத்தவர் சொற்படிக்கு மொழியாதிருந்திடுதை,
முத்தியடைவதற்கு சுத்திசெய்காயமதை
    சாத்திரந்தன்னைவிட்டு, சருகியுழன்றிடாமல்,
சாஅய்ப்பேணி நடந்துகதிபெறுவீர் ஞானமறி

தொல்லுலகிற்சிறந்தோர், சொல்லும்வகையறிந்து, (7)
    நல்லஷாஹூதிதென்ன நாடும் நாடும்,
மெல்லவே இபுலீசின், மாசுற்ற மோசவலை,
    வீசியதிற் சிக்காமலோடும் ஓடும்,
புல்லர்கள் விள்ளுஞ்சில புழுவல்கட் சரியாமோ?
புதியவன்றூதர்நபி புகழினைமிகுகேண்மோ?
அல்லின்ஸானுவிர்ரிஎன், றறியாதிருக்கலாமோ?
அண்டர்முதலெவர்க்கு, மரசென்பதும் பொய்யாமோ?
    வெல்லுவன்போல் நினைத்து, வீரியம் பேசிடாமல்,
விடையபுல்கைரிடமும் விரைந்தறிவீர் ஞானமறி

தௌஹீதுப்பதமுற்றும்

# புகழ்ப்பா மஞ்சரி

## காப்பு வேண்பா

உலகெலாம் ரட்சித் துவப்பினன் மோட்சப்,
பலனெலாம் நம்மோர்க்கு பண்பின்—கலகருணம்,
நாயகமு ஹம்மதுமேல் கீர்த்தனைகள் நான்கூற,
தூயவிறை யேநீ துணை.

## அவையடக்கம்—வேண்பா

முற்று யிலக்கியமு மூதுரை யிலக்கணமுங்
கற்ற நிபுணர் கவிமுனம்—சிற்றடியேன்,
கூறுபல கீர்த்தனையில் குற்றம் பொறுத்தனைபோல்
தேறுமதி யார்கொள்வீர் தேர்ந்து.

## இஃது ஹாஜிஷரீபுஜிந்தானி என்றவாறு

### பல்லவி

நாயகமான என்பீரே—நிதம்
நலிபிணி யகற்றிவைப்பீரே திரு நாயக

### அநுபல்லவி

தாயக சற்குண தாஹா நந்நபியே
தமியனின் மிடிபவம் தவிர்த்திடுங் கதியே
சாயலில்லா தெங்கள் ஷாபிவு நிதியே
சர்தார்மன் மதியே—திரு நரயக

### சரணங்கள்

தூர்ரத்துல் பைலாவாய் துலங்கிய நாதா
துன்பமகல வருள் தாருமென் தாதா
குர்ரத்துல் ஜனியென் கோமறைப் போதா
குறைதீர்த்தாள் நீதா—திரு நாயக

எங்கும் புகழ் படைத்தவகனின் ஜாதா
ஏழைக்குதவிபுரி எழில் மஹ்மூதா
பங்கமற நிதமும் பார்மலர் பாதா
பயகாம்பர் வேதா—திரு நாயக

தசையதற்குரு முற்றுந்தந்த வென்பீரே
தாசனின் மீது பெருந்தயை புரிவீரே
பிசகறவான் திங்கள் பிளக்கச் செய்தீரே
பிர்தவ்ஸ் மன்னீரே—திரு நாயக

மங்கையாமீனாரீன்ற மன்னரே பாரும்
மாதிஹூ அபுல்கைரின் மாசறக்காரும்
சங்கையுடன் கடைக ணித்தருள் தாரும்
சாபியே நீரும்—திரு நாயக

முற்றிற்று

(இஃது அந்தரமும் புவியும் புகழும்படி என்றவாறு)

## பல்லவி

தண்மலர்ப்பூம்பதந் தாசனுக்கருளுந் தாஹாமுஹம்மது மஹ்மூதே
மண்ணவர் விண்ணவர் மற்றவர்க்கெல்லாம் மறைநிறை புரியுமிறை தூதே

## அநுபல்லவி

புகழ்—எங்குந் தங்குந் துங்க சங்கை நபிநீரே
அருள்—தந்து வெந்தன் புந்திமகிழ் செய்தீரே
மெய்—கந்தங்கமழும் பீரே
எங்கள்—காத்திமுல் அன்பியாவேநீர் காத்தருள்வீரே தண்

## சரணங்கள்.

சோதி சுருதிமுடி அர்ஷினிற்றங்குஞ் சுந்தர நம்மிறசூல் நபியே
நீதிநெறிமுறைக ணித்தரும்புரியும்நெய்னார்முஹம்மது நற்ஷபியே
உயர்—தங்கமலரடி தஹ்தத்தருவே
திரு—அங்கமெங்குமொன்று மொட்டா வருள்கோவே
எழில்—மங்கை ஆமினார் மகவே
புவி—மக்க நகாரனு மெங்கள் சொற்க நாதரே தண்

மாதவர்க்கரசப்துல்லா பெருமன்னு மாசற நற்பலன் றருவீரே
பூதலமீதினிற் புண்ணிய மோம்பும் பூபதியே என்னையாள்வீரே
அரும்—பக்ஷமுடன் ரெக்ஷித்திடும் பயகம்பரே
எனக்—கிக்ஷணமே அருள் செய்யும் பாத்திபரே
புகழ்—நிக்ஷயமர்னபிரே
நிதம்—நேசம் வைத்து நேர்வழியில் நிறுத்துவீரே. தண்

ஆதியஹதியத்து அருமரூபியதனி லன்பாயுதித்திலங்குமண்ணலரே
சோதிவஹதத்தினிற்சுகுதிசுரூபமறதுலங்கியமூச்சுடர் செம்மலரே
தாம்—அவ்வலுமா கலகல் இலாஹ நூறி
பின்னும்—அவ்விதமே அனகுல்லுன் மிந்நூறி
என்று—மிவ்வாறுமிகுகூறி
யது—மிக்க உண்மை சக்கில்லை மின்னூறிபாறி. தண்

பஞ்சமாபாவிக்கு பாருலகிலுயர் பாத்திபரேபிணிபவத்திரும்
தஞ்சமென்றென்னை தயைபுரி நாளும்தாவி முஹம்மதுவேகாரும்
இனி—தங்களல்லால் வேறில்லை தாயகரே
என்னில்—தாழ்வுதுயாறச்செய்யும் நாயகரே
திரு—தாஹா முஹம்மதரே
இப்ப—ஆசியபுல்கைரிஞசு அகற்றுவீரே. தண்

முடிந்தது.

(இஃது ஜெகஜோதி என்னுமெங்கள் என்றவாறு)

அகமோகமுடனிந்த ஜெகதலம் புகழுந் தம்
மடிபெறநிதம்புக ழோதுகின்றேனே
அகதவனருள்பெற்ற அஹ்மது நந்பியே ரீ ரீ ரீ
அன்புடனருள்புரிவீர் அண்ணலர் முஹம்மதுவே அகமோக

உலகம் கலைபல்வும் புகழும் அலரியுறுங்
கலந்தை வளரும் அபுல்காஸிம் நாவிரே
பலன்பெறும் ஹஷரென்னுந்தலமதில் நலம்பெற ரீ ரீ ரீ
கலந்தை யகற்றியாளும் பொலம்பத அஹ்யதே அகமோக

கண்டவர்திகைக்க சிறமுண்டமதற்குருவிந்து
மண்டலம்புகழச்செய்த மன்னர் நாதரே
வெண்டிரை போற்றீதிற்புக்கி வெளிப்புரப்பட்ட இந்த ரீ ரீ ரீ
மீண்டனுக்கருள் புரிவீர் கொண்டல் கொடையிடும்பிரே அகமோக

காட்டில்பிடிபட்ட மானின் நாட்டப்படிக்கேயுவந்து
கேட்டபடி வாட்டமின்றி மீட்டிவைத்தோரே
கேட்டில் விழுத்தாட்டிவைக்கும் தாட்டனுஜ்ஹலவன் ரீ ரீ ரீ
போட்டியறச்செய்தன்னேனை கேட்டிலாக்கும்மஹ்மூதே அகமோக

திங்களை யிங்குவழைத்த வெங்கடுங்க சிங்கயேறே
பங்கமற நன்கருளும் பயகாம்பரே
எங்கும் புகழ் தங்குஞ் சங்கை மங்கையாமினர் மகவே ரீ ரீ ரீ
தங்களை யல்லாது வேறு சங்கதமுடையோரில்லை அகமோக

தாஸீன் யாஸீனே அபன்வி காசிம் நாவிரேயிப்பூவில்
ஆவியபுல்கைரின் ஆசை அறச்செய்வீரே
பாசவலை வீசும்இபு லீசு நாசகாலன்ருனே ரீ ரீ ரீ
ஆசயுடன் மோசஞ்செய்ய அலைகின்றதாலே இப்ப அகமோக

முற்றிற்று

(இஃது தரணுந்தமிரு என்றவாறு)

பல்லவி

ஏழையையுவந்திவ் வேளையருள்நாதா—ஓ!எழில் மஹ்மூதா ஏழை

அநுபல்லவி

நாளைமஹ—ஷர்தன்னில் நாடிநலம்புரிய வாரும் நவி னப்பதந்தாரும்
சாளையப்படுங்காலை சாதிக்கேஎன்றன்முகம்பாரும்உயர் தாசிமேகாரும்

தாளைதந்தாளுமெங்கள் தாஹிரு நபியே
தமியன் செய்பவம்பிழைத் தவிர்த்திடுங்கதியே
மூளையுருகும் வேளைமுன்வரு மதியே
முச்சுடரிலுதித்த முஸ்தபா நிதியே ஏழை

சரணங்கள்.

வானின்மதியழைத்தவள்ளல்றசூலேயென்னையாளும்மக்கமாநகர்வாழும்
கானின்மானைவிடுத்த காத்திமுல் லன்பியாவே நாளும்—கருங்
கண்மனம்பேளும்

மேனிதனில் கஸ்தூரி வீசும்பூமானே
மேன்மை நபிகள் புகழ் வேந்தலென்கோனே
ஞானிகள்துதி செய்யும் நாதர்சீமானே
ஞாபகமோடு நிதம் நாடினேன் நானே ஏழை

அஞ்சிப்பயந்துத் தங்க ளடியிற் பணிந்தேன் துயர் நீக்கும்—திரு
வருளதால் நோக்கும்
கெஞ்சி தவிக்கும் பைபயல் கேதமகற்றி நட்பைத் தாக்கும்—எற்கு
கெடுமிடி போக்கும்

தஞ்ச மென்பவர் கட்குத் தாயகப்போதா
தாசனுளத்தகலாத் தண்மலர்ப்பாதா
சஞ்சலந்தீர்த்துப்பதஞ் சேர்த்திடும்தாதா
சைய்யத் முஹம்மதுர்ரசூலிறைத்தூதா ஏழை

முத்திமறையிற்சேர்க்கும் முந்தமுகம்மதும்மைநாடி மனமுருகியேவாடி
பத்தியுடன் கலங்கிப் பதரியலேகிறேன்யானேடி நிதம்பதமதைத்தேடி
மித்திரம்வைத்தாளுவீர் மிஸிரெங்கள்பீரே
மிஸ்பாஹுல்லலாயே என் மிறைநீக்குவீரே
நித்தியமுழுமது நிரையதிநேரே
நிட்சயமாக்கு மெங்கள் நீதநாஸீரே ஏழை

ஹாஷிக்குலத்தில்வந்தஹாதியே எங்களிறசூலே புகழ் ஹாஷிமெந்நூலே
ஆசியானபுல்கைர் அஹ்மதென்பவன்சுவாலே என்றும் அக்பில்உசூலே
ஆசீந்தி என்னை யாண்டிடு மன்னே
அடியனினவதியையகற்றி யென்றன்னை
நேசம்வைத்து நீதநெறியதின் முன்னே
நேமமாக்கும் நெயினார்த்திருவன்னே ஏழை

முற்றிற்று

(இஃது காதல்கொண்டேனே என்றவாறு)

பல்லவி

சொற்கநாதரே உயர்
நற்பாதந் தற்போது எற்கருள்செய்குவீர் சொர்க

அநுபல்லவி

பொற்கர மார்க்கைப் பொருத்திப்புகழ்பெற்றரீ ரீ ரீ
சற்குணராகிய ஷாபிவுஸாதிக்கு சொற்க

### சரணங்கள்

அந்தர மீதி ஹுறுஞ்
சந்திரன் விர்தையாய் வந்திடச்செய்திடும்—அந்தரமீதி
கந்தக்கமழுங் கருணையபுல்காஸிம் நீநீநீ
காரணரே என்னை காத்தருள்செய்குவீர் சொற்க

தாசன்மீதுறுந் துயர்
தாஹாவேதாங்கள் தவிர்ப்பீர் தயைசெய்து—தாசன்
நேசம் வைத்தென்னை நெறிமறையின் முன்னே நீநீநீ
நேர்வழிகாட்டிடும் நெய்னார் முஹம்மதே சொற்க

சிந்தை நொந்தேனே இந்த
சிறியேனை பட்சமாய் ரெட்சித்து ஆளுவீர்—சிந்தை
முந்தப்பவவினை முழுதுமறச் செய்வீர் நீநீநீ
முருஸல்நபிமார்கட் கரசே முஹம்மதே சொற்க

தஞ்சமென்றேனே இப்ப
தாரணிமீதினிற் பூரணநீதரே—தஞ்ச
கெஞ்சும புல்கைரின் கேதமகற்றுவீர் நீநீநீ
நெஞ்சமிறங்கி நிதமும் பதமருள் சொற்க

### முற்றிற்று

(இஃது சாமராஜபூபனே நமோ நமோ என்றவாறு)

### பல்லவி

திரியுலோகமும் புகழ்ப்பதி—பதி
திருபதமெனக் கிருபதியிலுந் தரு முஹம்மதுவே
தீது கோது தீர்த்தருள் புரிவீர் திரியுலோக

### அநுபல்லவி

வானின் திங்கள் தன்னை வாவென்றோர்—வென்றோர்
வார்த்தை யில்வெகு நேர்த்தி யாய்வரப் பூர்த்திசெய்தீரே
வாரும் பாரும் வாகுறு நபியே திரியுலோக

### சரணங்கள்.

சீருலாவு மக்கமா நகர்—நகர்
சிறக்கவந்தவா இரக்கமுடனே பரக்கத்தைத் தருவீர்
சிந்தை நொந்தேன் தீதகற்றுவீரே திரியுலோக

கந்தமெய்யிற் கமழுங்காதமே—தமே
காரண திருவாரண பரிபூரண மதியே
காரும் தாரும் கதமதை நபியே திரியுலோக
நாகையபுல் கரையாளுமே—ளுமே
நாயக திருதாயக உயர் தூயக நபியே
நாதா நீதா சாதக ஷபியே திரியுலோக

முற்றிற்று

(இஃது பாதபங்கயமருள்வீரே திரு என்றவாறு)

பல்லவி

நீதா நிரமுமருள்வீரே உயர்—நீதா

அநுபல்லவி

நாதா நபிகள்புகழ் வேதாவிமலனிறை
தூதா துயரகற்றுவீரே உயர் நீதா நிதமு

சரணங்கள்.

கலை நான்குமுணர்ந்த நந்நபியே—கருணையுடன்
கடை கணித்தாளுமுயர் ஷபியே
நிலைவழுவாத நிதிமதியே நிதமுமெய்யிற்
நிறைந்த கஸ்தூரி கமழ்பதியே
மலையுடன் பெசிக்கொண்ட மாமக்க வாழ்வே என்றன்
மாசறக்காறும் முஹம்மதுவே உயர்நீதா

பாரிலும்மைப் போலொருவரையும்—படைக்கவில்லை
பரனதைபகர்ந்ததை மறையும்
வாரியிரைக்குமதுஹதையும்—வரிசைபெற
வையகத்தோர் புகழுந்துதியும்
நேரிலறிந்துணர்ந்த நிபுணர்கட்சறிவித்து
நின்றதுண்மைதான் முஹம்மதுவே உயர்நீதா

முருஸல் நபிகள் தங்கள்மார்க்கம்—முறையதனை
முழுதுமறிந்தவர்கள் நோக்கம்
திருவருள் தங்குமிகு ஊக்கம்—திசைமுழுதும்
தீன்பயிர்ச்செய்து அதன் தீர்க்கம்
பிருசமுடன் தங்களின் பிரபலஉம்மத்தினிற்
பிசகற சேர்ந்தார் முஹம்மதுவே உயர்நீதா

பதமதிற்சேர விருதயமே—பலதினமும்
பலன்பெற நாடியருள் மயமே
விதமறியா மற்றிருஜயமே—மிகதியங்கி
விதனத்துடன் தங்களை நயமே
சதமென நம்பினதால் தருணமுதவுமென்றன்
சாதிக்கு தாஹா முஹம்மதுவே உயர் நீதா

வாகையுறு மக்கா வாழ்பதியே—வரிசைதரும்
வள்ளலே தங்கள் பதம்கதியே
ஓகையுறவேற்கருணிதியே—உமதடிமைக்
குற்றதுணையாய் வந்ததுதியே
நாகையபுல்கைருவின் நவிபிணிநீக்கிபெரு
நலம்புரிந்தாளு முஹம்மதுவே உயர்நீதா

முற்றிற்று

(கந்தங்கமழ் பாதமலர் தாருமையா என்றராகம்)

## பல்லவி

சங்கை மாமலர்ப்பாதம் தாருமையா—ஏழை
பங்கமறவே நிதம் பாருமையா திருசங்கை

## அநுபல்லவி

துங்கஒளியாய் துலங்கும் நபியே
எங்கும்புகழும் எழில்மாமணியே திருசங்கை

## சரணங்கள்

கத்தனினருள்பெற்ற கருணையரே—என்னை
சித்தமிரங்கி ரெட்சித்தாழ்பவரே
முத்தாயுதித்தமுருஸற்கரசே
முத்தியருளும் முஸ்த்தபா நபியே திருசங்கை

நிதமுமிடியதனை நீக்குவீரே—என்றன்
நதமறவே யருள் தாக்குவீரே
பதரில்குபிரர் பகைஞர்முழுதஞ்
சிதரவ்வரையால் சிரைக்கொண்டவரே திருசங்கை

பொங்கும் புனலழைத்த புண்ணியரே—புகழ்
எங்குமலிந்த உயர்கண்ணியரே
மங்கையருவா மிருகர்நிதியே
எங்கட்கருள்வீர் எஜமான் நபியே திருசங்கை

வாகையுறு மக்காவிற் கோபதியே—மிகு
வரிசையுயர் நந்நபியே நிதியே
நாகையபுல்கைர் நவி நீக்குவீரே
ஈகையுறு மன் இறை தூதென்பீரே திருசங்கை

முற்றிற்று

(இஃது வாருமையல் தீருந்தேவே வஞ்சிமுகம்பாருங்கோகேஎன்றவாறு)

பல்லவி

தங்கப்பதந்தன்னிற் சேருந் தாஹாமுஹம்மதுநபியே தங்க

அநுபல்லவி

எங்கும்புகழ் தங்குந்துங்க யெழில்மஹ்மூதே என்றன்
பங்கமகற்றியருள்வீர் பயகாம்பர் முஹம்மதுவே தங்கப்

சரணங்கள்

வாகையுறு மக்காஷரீப் வந்தவதரித்தயெங்கள்
ஈகையுறும்புகழ்பெரும் இறசூல்மன் முஹம்மதுவே தங்கப்

சிர்று சிர்ருய்வந்துதித்த சிறப்புள்சிகாமணியே
அர்றபீக்குல்லகுலாவின் அருள்பெரும்முஹம்மதுவே தங்கப்

நானேஹஷிர்வேளையினிற் நற்கதியடையும்படி
தானேதந்தருள்புரிகுவீர் தாயகர்முஹம்மதுவே தங்கப்

பாதகனனிப்புவியில் பாவியைப்போலாருமுண்டோ
தீதறக்காற்றருள்செய்வீர் திங்களர்முஹம்மதுவே தங்கப்

தோகைவடிவாய்சிறந்த துலங்கிய நந்நபியே
நாகையபுல்கைரென்னேயான் நாயகர்முஹம்மதுவே தங்கப்

முற்றிற்று.

(பாதாம்புயமலரை என்றராகம்)

### பல்லவி

முத்தியருள் சித்திதரும் முச்சுடர்மாநந்நபியே
பத்தியுட னிப்புவியிற் பாவியினைக்காத்தருள்வீர் முத்தி

### சரணங்கள்

சங்கையுறுநன்னபியே சற்குணரேநீர்கதியே
பங்கமறப்பார்பதியே பயகாம்பர்பாத்திபரே முத்தி
காதங்கஸ்தூரிகமழ் பாதந்தோயாதபுகழ்
பூதலமீதுண்மை நிகழ்த் துய்யாஷாபிஃநபியே முத்தி
எழுவானுங்கடந்தமர்ந்தீர் ஏகன்விகாவிற்சிறந்தீர்
அழுதிரந்தோர்க்கருள்புரிந்தீர் அண்ணல்முஹம்மதரே முத்தி
ஆசியபுல் கைருஸாக்க அருந்தவத்திலவன்சிறக்க
நேசம்வைத்தருள்புரிவீர் நெய்னார்முஹம்மதரே முத்தி

முற்றிற்று.

(இஃது தருணம் சரணம் என்றவாறு)

### பல்லவி

வறுமை சிறுமை யகற்றியாளுவீர்
  பெருமை நந்நபியே
வரவருள்தர புகழுற ஜெயம்பெற வறுமை

### சரணங்கள்

தஞ்சமென்றேனும்மைக் கொஞ்சும்பையல்தன்னை
  கிருபைசெய் ஷாபியே
வரவருள்தர புகழுற ஜெயம்பெற வறுமை
பஞ்சமாபாதகன் அஞ்சிநின்றேன் அருள்
  செஞ்சொல்முஹம்மதே
வரவருள்தர புகழுற ஜெயம்பெற வறுமை

மங்கைகதிஜாவை மணம்புரிநாயகா
    துங்கமுஹம்மதே
வரவருள்தர புகழுற ஜெயம்பெற வறுமை
பாரினும்மைப்போலே வேரில்லே தாயகா
    பட்சம்வைத்தேநிதம்
வரவருள்தர புகழுற ஜெயம்பெற வறுமை
நாலகயபுல்கைரை நலம்பெறச்செய்குவீர்
    ஈகைமுஹம்மதே
வரவருள்தர புகழுற ஜெயம்பெற வறுமை

முற்றிற்று.

(இஃது அந்தரமும் புவியும்வந்து என்றவாறு)

பல்லவி

கந்தங்கமழுந்திரு சந்தமாமலர்ப்பதந்தாரும் பதந்தாருந் தங்கள்
சொந்தப்பயலென்றென்னைத் தொல்லுலகினில் நித்யங் காரும்
புகழ்—எங்குந்தங்குஞ் சங்கைபொங்குந் துங்கநாயகா
அருள்—தந்துவெந்தன் புந்திமகிழப்பாருந்தாயகா
திரு—தாஸிமென்னுதா—தாவீமீம்றீதா
    காஸிமின்தாதா—மாசில்லாபோதா
பாருலகில் நீரேயன்றி வேறுதுணை ஆருமில்லை கந்தங்

கானின்மானையங்கு—போனபோதுபிணைநின்றீர்
உயர்—வானின்திங்களதை மானமோவேவிண்டீர்
திரு—தக்கமக்கமிக்க சொக்கத்ததிபர்ஹாமிதே
எனை— பட்சமுடனே ரெட்சித்தாளவேண்டும் அஹ்மதே
இப்ப—தஞ்சமென்றேனென் சஞ்சலந்தீரும்
    அஞ்சினேன்நானும்—கெஞ்சினேன்நாளும்
நல்வழியில் தில்லதனைச் சல்லெனவே குல்நபியே கந்தங்

பாதம்பூமியதின் மீதுதோயாநயினரே
மேனி—காதங்கந்தங்கமழ் நீதபாதமருள்வீரே
இனி—சாதுயேதுசாதவேத போதகாதரே
அருள்—நற்றவத்தின் சித்திமுத்தி நவிலுந்தாதரே
இப்ப—ஆசியென்மீது நேசமாய்தீது
மாசறகாரும் தேசிகஹாதி
விண்ணவர்க்கு மண்ணவர்க்கும்
பண்ணவர்க்கு மண்ணலரே கந்தங்

என்னையாளுந்திருமன்னர் நாதர்ப்பெருமானே
அருள்—மன்னுமாறு நலிதீரக்காருமுயர்கோனே
புகழ்—மாதவங்கணங்கு ஒங்கசெய்யுமன்னரே
பெரும்—காதகங்களேகவென்னைக் காருமின்னரே
இப்ப—துன்பத்தைப்போக்கும் இன்பத்தைத்தாக்கும்
வன்கணைநீக்கும் அன்புடன்நோக்கும்
தாயகரே நாயகரே தயவுசெய்யுந்தூயகரே கந்தங்

மாதர்நாயகியா மீஞரீன்ற மஹ்மூதே
என்றன்—தீதறக்கருணை செய்யும் திவ்யஇறைதூதே
அருள்—தாரும்பாரும்காரும் துங்பந்திரும் அஹ்மதே
செழுங்—துங்கதங்க சங்கை பாதந்தாரும்ஹாமிதே
இப்ப—முத்தியைகாடி சித்தியைத்தேடி
இத்தலமீது பத்தியாய்பாடி
அஞ்சிநின்றேன் தஞ்சமென்றேன்
கெஞ்சுமபுல் கைருக்கருள் கந்தங்

முற்றிற்று.

(இனியாகிலு மென் துயரத்தை தீர்த்து என்றவாறு)

பல்லவி

மணியாயுளதா மறைபதந்தந்து
மனமகிழுறவருள் புரியிறைத்தூதா மணி

அநுபல்லவி

அணியாயிலங்கு மருந்திருகரத்தால் மணி
அண்ணலரே யெமக்கீந்திடுக்கொடையை

## சரணங்கள்

ஆணைரைவிளக்கும் அஹ்மதுநாலா
அருளார்பொருளார் ஆமினுபாலா
கோணலில்லாமறை கொடுவேந்தசிலா
கோனேமுகிற்குடை யிடுக்குணமூலா
கதமே காமே நிதஞ்சதமேஎன்
நதமைத்திரும் காயகமே மணி

பூதலம்போற்றுநற் பூபதிநீதா
புண்ணியகண்ணிய கண்மணிநாதா
கேதமறவருளும் கேசரிதாதா
கதிதரததிபிது கருணைசெய்வேதா
காரும் பாரும் கவலைகளறவே
தர்ரும் பாதந்தாயகமே மணி

அருங்கரமதனில் லமுதனற்றேனே
அருளியமதிநிகர் அஹ்மதுகோனே
மருமலர்செரிமக்க மன்பெருமானே
வறுமைகளறச் செய்யும்வள்ளல்பூமானே
மன்னுவென்னை கடைகணித்தாள
வின்னமென்னு தாமதமோ மணி

மங்கையுமை மாவின் மருகரேஹாதி
மாதவர்க்கரசப்துல்லா பெருமாதி
துங்கவடிவமாய்த் துலங்கியசோதி
துணைபுரிந்தபுல்கைரின் துயர்போக்குநீதி
துன்பந்துயரை யென்பால்நீக்கி
அன்பாயின்பம் அருள்வீரே மணி

முற்றிற்று

(இஃது தஞ்சமுமது நெஞ்சமிரங்கி யென்றவாறு)

## பதம் பல்லவி

நாயக நாதா நம்பினேன்நீதா தாயகரேபதந்தந்தருள்வீர்

அநுபல்லவி

தூயரசூலே துன்பமென்பாலே துலைத்திடுவீர் அஹ்மதுநபியே நாயக

சரணங்கள்

ஏகன்லெளாக்க என்றவன்விண்ட வாகையுறுஞ்சீர்வள்ளலரே
ஈகைறபீபே இறையின்ஹபீபே இன்பந்தந்தாளும்அன்பினரே நாயக
பொற்கரமீது புனல்சுறந்தோட
புரிந்தரசூலே பூதலத்தில்
நற்பதந்தந்தென் ஞானமென்றன்னை
நற்கதிகாட்டும் சற்குணரே நாயக

ஏழையென்மீதிவ் வேளைபற்றீது
ஏகவருளுமென் யோகலரே
தாளைதந்தாளும் தயைபுரிநாளும்
தாஹாமுஹம்மது தாயகரே நாயக

புண்ணியநாதா பூபதிநீதா
கண்ணியசீரார் கண்மணியே
திண்ணியவிசுலாந் தீனருளீந்த
திருமறைதிவ்விய திங்களரே நாயக

அந்தரமேழும் விந்தையாய்மீளுஞ்
சுந்தரவெம்மிற சூல்ஷபியே
கந்தங்கமழ்மெய் காத்திமுன்னபியே
காத்தருள்தாருங் காரணரே நாயக

ஆசியபுல்கை ரஹ்மதைநாளும்
மாசறக்காரும் மன்னவரே
தாசனைப்பாரும் தாளிணைதாரும்
சற்குணசாதிக்கு நன்னபியே

முற்றிற்று

(மதினாநகர் காவலரே என்றஇராகம்)

## பதம் பல்லவி

துதிமாதவநாயகரே—துயர்தீர்த்தருள் தாயகரே (1)

## அநுபல்லவி

முதிரங்குடையிடு முஸ்தபாநபியேஎன்
முதிர்ப்பதை நீக்குவீரே—உம்மை
கெதியெனநம்பினேன் கேவலன்மீதுறுங்
கேதமறச்செய்வீரே—துதிமாதவ

## சரணங்கள்

மருவளர் செரி மக்க மாநகர் நபியே யென் (2)
மணப்பிணியகற்று வீரே—தங்கள்
திருவடி சதமேதி யாகியரே—என்றன்
தீதறச் செய்குவீரே—துதிமாதவ

விண்ணோரு மண்ணோரும் விரும்பிப் புகழ்கின்ற (3)
விமலனின் றிருத்தூதரே—நாங்கள்
திண்ணமனம் வாடி தியங்குறோம் யாநபீ
திறல்வரைத்தாழ்த்து வீரே—துதிமாதவ

எழுவானையுங் கடந்து எழில்பெற அற்சினி (4)
லேறிவசனித்தோரே—தாங்கள்
எழுவாய்த்தஜல்வியிலெழுந்து வெளியுதித்த
ஏகன்றசூல் நீரே—துதிமாதவ

மங்கை ஆமினார் பெற்ற மகவே முஜம்மிலே (5)
மாதிரைக் காத்தருள்வீர்—தாங்கள்
சங்கைஷர அதனை எங்கட்கு ஈந்திடும்
சர்தார் முஹம்மதுவே—துதிமாதவ

அடியேனபுல்கைரு அஹ்மது இப்ருஹீம் (6)
ஆசியை நேசிப்பீரே—நாளும்
மிடியையகற்றி பின் மிறல்நீக்கி ரக்ஷித்து
மித்திரம் வைத்தாள்வீரே—துதிமாதவ

முற்றிற்று

(வாரார் வாரார் நபிநெயினர் என்ற இராகம்)

பல்லவி

நாதாநீதா நளினப்பதம்-நம்பும்பையற்கருளும் நிதம் (1)
நலம்பெற்றிருக்கவே-யாம்-நலம்—நாதாநீதா

அநுபல்லவி

தாதார்பொழிற் சூழுமக்கா-தனக்கரசாய்வந்தீர் மிக்க (2)
தாஹா நன்னபியே-திருதாஹா—நாதா

சரணங்கள்

நீளுந்துயர் தீர்த்திடவே-நிதமுமென்னை காத்திடவே (3)
நீரருள்புரிவீர்--இப்பநீரருள்—நாதா

நானே ஹஷர் வேளையிலே-நடுங்கி மூளையுருகையிலே (4)
நலந்தந்தருள்குவீர் பெருநலந்த—நாதா

பூபதி நன்னாட்டம்பெற-புண்ணியர் கொண்டாட்டமுற (5)
பூதலத்துதித்தீர்-இந்தபூதலத்—நாதா

பாதந்துணை போற்றுமிந்த-பையல் பவந்தீர்த்து இந்த (6)
பாரினிலருள்வீர் இந்த பாரினில்—நாதா

ஆசியபுல்கைருரைக்க-அருந்தவத்திலவன்சிறக்க (7)
அருள் தந்தாளுவீர்-நல்லருள்—நாதா

முற்றிற்று

(சாமியேயிது ஜாலம் என்ற இராகம்)

பதம் பல்லவி

ஆசியாநெனைக்காத்து வருள்செய்யஹ்மதே (1)

அநுபல்லவி

நேசித்தருளென்பீரே
நாசிரே முபஷ்ஷிரே
நிதங்காருந் துயர்தீரு மருள்தாரும் ஹாமிதே—ஆசி

சரணங்கள்

மாமக்க வாழ்வே-மதினாவின் கோவே (2)
மன்யாவின் முஸ்தபாவே-எம்-தாவின்முற்தலாவே—மிடி
தீர்த்து வெனைக்காத்து பதஞ்சேர்த்து ஆளுவீர்—ஆசி

மங்கையுமைமா—மருகரென்னுதா (3)
துங்கநன்னபிநீதா துயர்தீருமிறைத்தூதா—என்
சிந்தைமிகுநொந்துவிங்குவந்தேன் செய்யிதே—ஆசி

பெருமைஆமீனர் பெற்றபூபாலா (4)
அருமையப்துல்லாபாலா—வறுமையகற்றுஞ்சீலா—என்
மன்னே திருவன்னே—பிணிதன்னைப்போக்குவீர்—ஆசி
அஹ்மதபுல்கைர் அல்லலைத்தீரும் (5)
மஹ்மூதேஎனக்காரும்—மஹ்பூபேமுகம்பாரும்
மாதவா உமைநாடி புகழ்ப்பாடி வாடினேன்

முற்றிற்று

(சொல்லாமொழி சொன்னாரடி என்றவாறு)

பதம் பல்லவி

மக்காநந்நகர்நாயகா, மன்னரேசற்குண தாயகா (1)
எக்காலுமருள்தூயகா, எந்தலே, எங்களிறைத்திருத்தூதரே—மக்கா

சரணங்கள்

ஆதிமயில்வடிவானோரே, அப்துல்லாபுத்திரரானோரே (2)
நீதிமறை மஹ்மூதரே நித்தமெனக்கரு முத்தியளித்தருள்-மக்கா
குந்தகன்ஜன் மஃபிய்யதீ, கோபதியேஇந்தவையத்தி (3)
லுந்தமைபோவில்லை நியத்தீ, உத்தமரேயுயர்சித்திபெருந்திரு-மக்
தண்மலர்தாடுணைத்தாருமே, தாசிமேஎன்றனைக்காருமே, (4)
அண்ணலரேமுகம்பாருமே, ஆரணரே என்னையாண்டருணீருமே-மக்
சத்தியசன்மறைப்போதரே, சங்கையுருமஹ்மூதரே (5)
கத்தனுயத்துநற்றூதரே, காத்தருள்தாரு மபுல்கைரையாளுமே-மக்

(இஃது தூதென்றுணராயோ, என்றராகம்)

பதம் பல்லவி

நாயகமேகாரும் என்மீது. தூயநலந்தாரும்-ஹபீபென் (1)

அநுபல்லவி

தாயகதாஹாநபியேதஞ்சகதி
சாயவில்லாகோனே-மன்பூமானே-வென்சிமானே ஹபீபென்-நாயகமே

சரணங்கள்.

பாதம்படாப்விநீதரேகேதமென் மீதடாதருள்வீர் (2)
மயம்மேநீர்-பயத்தைதீர்-ஹபீபென்-நாயக
தங்கபுகழெட்டு திக்குந்தலங்கிய மக்கறகுல் நாதா (3
மறைபோதா-இறைதூதா-ஹபீபென்-நாயக
வாவிசூழ்நாகையிற்பாவியபுல்கைரை, மேவியேயாண்டருள்வீர் (4)
ஈகையுடையீர்-வாகையுளர்நீர்-ஹபீபென்-நாயக

முற்றும்

(பாருமென்தன் கோலம் என்ற இராகம்).

### பதம் பல்லவி

பாதமதிற்சேரும்—பயகாம்பர் பாத்திபரே—மன்மன்—பாத (1)

### அநுபல்லவி

காதங்கஸ்தூரிமெய்—கமழுமுல்லாசரே
காதாவென்மீதருள்வீர்—மன்மன்—பாதமதிற்

### சரணங்கள்.

வானின்மதியதை-வருகவென்றோதிய, (2)
மேனிதுய்தாகியவா-மன்மன்-பாதமதிற்
உஹுதுவரையுட னுலகோரறிந்திட (3)
அஹூதருளாற்பேசினீர்-மன்மன்-பாதமதிற்
வானேழையும் வந்து வைப்போல்கடந்தசீ (4)
மானே என்னைக்காக்கவே-மன்மன்—பாதமதிற்
தோகைவடிவமாய்-துவங்கிய நாயகா (5)
நாகையபுல்கைரையாள்-மன்மன்—பாதமதிற்

முற்றிற்று

(வந்தாள இதுதருணம் என்ற இராகம்)

### பதம் பல்லவி

பொற்பாதமெனக்கருள்வீர்—பொற்பாத (1)
புகழுறுமக்காவின் புனிதநபியே—பொற்பாத

### அநுபல்லவி

சற்சனர்புகழ்திரு தாயகஷபீயே (2)
சற்குணராயுதித்த சங்கைநபியே—பொற்பாத

### சரணங்கள்

அருமறைபோற்றுநல்-லண்ணலேன் நாதா (3)
வரும்பிணியறச்செய்யும் வள்ளல்நபியே—பொற்பாத

துங்கமயில்வடிவாய் துலங்கியதாயகா (4)
எங்கும்புகழ்மலிந்த—ஏந்தல்நபியே—பொற்பாத
மங்கையுமைமாலின் மருகரென்னுயகா (5)
சங்கையுறும்ஹாமிது ஸர்தார்நபியே—பொற்பாத
நாகைபுல்கைருவின்—நலிபிணியகற்றிடும் (6)
ஈகைநபியே-இந்தஏழைக்கருள—பொற்பாத

முற்றிற்று

(மையல்மீருதேஎன்னுதா என்ற இராகம்)

பதம் பல்லவி

வையகம்புகழும்பீரே-வந்தருள்வீரே-உய்யசீரே—வை (1)

அநுபல்லவி

பையவின்பால் பட்சம்வைத்து—பாரும்நாயகா
நலிநீக்கும்—வையகம்

சரணங்கள்.

அருமதிதன்னை அழைப்பித்தீர்முன்னை (2)
அண்ணல்தாயகா, துயர்தீரும்—வையகம்
கானுயர்மானை—கண்டதுங்கோனை (3)
காத்துரட்சித்தீர்—பிணைநின்று—வையகம்
கமழ்மிஃருஜில் ஹாதியைநேராய் (4)
கண்டுவிண்டீரே-இறைதூது—வையகம்
மாதுகண்மாய்கையிற் மாட்டியிவ்வேழை, (5)
மாய்ந்து நின்றேனே-அருள்தாரும்—வையகம்
தாசனபுல்கைர்-தமியனின்மீது (6)
தயவுசெய்திடுமே—துணைவாரும்—வையகம்புகழும்

முற்றிற்று

(தருவார் பெருமானடியே என்ற இராகம்)

பதம் பல்லவி

புகழாரும் பூபதியே—புவிமீதினிற் (1)
புனிதபதகிதமுந்தருகபணிவேன்றிரு—புகழார்

### அநுபல்லவி

அகமேதங்களருளுடி அதுவேவிசனமிகு வாடி
இசத்தோரறியப் புகழ்பாடி இரத்தல் உண்மையேநாடி—திருபு

### சரணங்கள்

ஏழை என்றன்மிடிநீக்கும் நாளைபடுந்தீபவம் போக்கும் (2)
தானை தந்தே நிதநோக்கும் தாஹா நபியே யருள்தாக்கும்—திருபு
மன்னே யும்மையல்லாது மனிதற்குயர்வு கில்லாது (3)
முன்னேபுகழுஞ்செல்லாது முறையாய்மறையுஞ் சொல்லாது-திருபு
வருமையகற்று வீர்கதியே வாகாய் ரட்சிப் பீர்ததியே (4)
பிருசம்வைத்தாளும் நிதியே-பிருதவ்சின்மன் கோபதியே—திருபுக
ஆசியபுல்கைரெனைக்காரும் அஹதின்றாதே யருள்தாரும் (5)
நேசம்வைத்தே பிணிதீரும்-நெய்னரே என்முகம்பாரும்—திருபுக

முடிந்தது.

(இஃது வாஞ்சகஞ்சகங்கள் போற்ற என்ற இராகம்)

### நோட்டு-பதம்

பாதம் பூவின்மீது நோயா-பாத்திபர்-நீரே—இந்த
பாரினில் நீரல்லால் வேறில்லையே—என்றன்
பாவமகற்றுவீரே
காதவ்கமழ் மெய்க்ஸ்தூரி வாசா! கடைசணித்தருள் புரிவீர்
காமர் நபிமார்கட்கு பதியே! கருணைப்பதமருள்வீர்
சுந்தர சுந்தர சந்திரன் விந்தையாய்-வந்திட செய்தவரே
பாதகனென்னை பட்சம் வைத்தாளும்-பயகாம்பர் நபியே உயர்
மயமே நன்னபியே புகழ்-பெருமன்யாஷபியே-யே—பாதம்

(பஞ்சாவிலக்குப் பதம்)

### பண்

பஞ்சாவென் றோர்கரத்தை பஞ்சமா பாதகர்கள்
தஞ்சாம லாண்டுகடோ ருந்திமுஹர்றமதில்
பஞ்சலோகங்களிலொன் றிற்செய்து பகலிரவும்
எஞ்சாமற் கம்பதனி லேற்றலைநீர் பார்த்திலையோ?

### பதம் பல்லவி

தொல்லுலகினில் வாழூர் தீனோர்களே கேளுஞ்
சொல்லு நஸீஹத்தை என்னாளும் நாளுங்
கல்லை கும்பிட்டுத்தொழுங் காபிரைப் போல் பஞ்சாவை
கருதிவைப்பதை விட்டு மீளு மீளும்
உல்லாசமாயதற்கு உருதிகாரணங்காட்டி
பொல்லாப்போ ராக்ளைப்போல் போதிக்குந்துட்ட மட்டி
எல்லாரையுங் கெடுத்த இபுலீஸ் நட்டாமுட்டி
கல்லாரைத் தன்வழியிற் காட்டியிழுக்கு மூட்டி
தொல்லைபடு நரகிற் றுறத் திதுறத்திவிட்டு
தொங்கு மிவரை நன்றாய்நோக்கும்நோக்கும்—தொல்லு

### பண்

ஆடைமுத லாபரண மதுதனக்கே யலங்கரித்து
மேடைகளில் நாட்டியதை மிகு பணிந்தே கையெடுத்து
கோடையிடிபோல் மேளம் கொடுமுன் வந்தேயடித்து
சாடைகள்செய் தேவணங்கி சார்வதை நீ காண்கிலையோ?

### சரணங்கள்

ஆலிம்கள் மெச்சுகின்ற அறபி பிகுயாவென்னும்
அந்தகிரந்தமதைப் பாரும் பாரும்
ஸாலிஹானப் பெரியோர் ஷாகிற் பஞ்சாவை கெட்ட
செய்கை ஹறாமென்றதை தேறுந் தேறும்
போலியர் புரிகெட்ட தென்றார் மாலா புத்தவில்
பொல்லாகுபிரர்செய்கை என்றார் குல்ஜாரதனில்
சோலியற்றவர் தொழுந்தொல்லை பஞ்சாவதனில்
சோதிக்குங் காரணங்கள் சொல்லித் திரிவதினில்
எலிமது வருந்தும் ஈனரல்லாது நல்லோர்
ஈதில்நடத்த வரமாட்டார்—மாட்டார்—தொல்லுலகி

### பண்

பல்குபுகாராமதீனு பக்தா துஷாம் ரூமு
வில்மின்கர் புன்வபலாபைத் துல்மு கத்திஸிலும்
நல்லோரார் மக்காதிமஸ்கு முதல் மிஸ்ரீராய்
புல்லர்செய் பஞ்சாவை புலக்கமதாய் வைத்தனரா? இல்லை யில்லை

சட்டிக்காட்டினேன் பல சுருதிகளை யென்றேழாய்
குசனத்தை தெளிந்து பாரும்—பாரும்
கட்டிவணங்குமந்த துட்டச்செயல் முழுதுந்
தட்டிவிலக்கியதை தேறுந் தேறும்

மட்டிகளுக்குணர்த்தும் மாப்பிள்ளை ஆலிமென்போர்
கெட்ட ஹறாமென்றார்கனீமத்துஸ்ஸாலிக்கீனில்
கெட்டிதலீலுடனே கோட்டினர் மவ்விதினில்
அட்டிபண்ணுமவிதை ஆராய்ந்து பாருமுன்னில்

அங்கு மிங்கு மலையுமறியாச் சிலமடையர்
ஆகுமென்றதை நீக்கி தேறும் தேறும்—தொல்லுலகி

பண்

இச்செயல்கண் முழுவதுமே ஈனமுறும் ராபுஜிகள்
குச்சகர்காரிஜ்முதலோர் குறைக்குமஹாக்கொடியசெயல்
நிச்சயமாய் நம்புமிதை நீதிநிறை முஸ்லிம்காள்
பச்சமுடன் மவ்விதைநற் பண்பாய்நீரோதிடுவீர்

பஞ்சா விளக்கமெனும் பாரிஸ் தமிழ்ப் புத்தகம்
பண்பாயவையுணர்ந்து பாரும் பாரும்
நெஞ்சார விச்செயல்கள் நெறியறியா ராபுஜி
நேசமாய் செய்தாரென்னத் தேறுந் தேறும்

வஞ்சம் நிறைந்தசில வங்காபிர் செய்து வந்தார்
வாண்டாம் விலக்கு மென்று மாசற்ற நேசர் விண்டார்
பஞ்சம் பிழைக்குங்கெட்ட பாதகர் வேஷம் பூண்டார்
பத்தினி பாவயர்கள் பதியை விட்டுமெகன்றார்

செஞ்சொல்லறிந்துணர்ந்த சீதேவிகளேயபுல்
கைறைக்குறைக் கூறாது நோக்கும் நோக்கும்—தொல்லுலகி
பஞ்சாவிலக்கு பதம் முற்றும்

# கவனிப்பு.

---

என்னுலென்பது கவிதைகளேற்கனவே பாடப்பட்டு அவைக்கு "நவாலங்காரமஞ்சரி" என்னுநாமஞ் சூட்டப்பட்டு 1910ம் வருஷத்தில் "நாகை கஞ்சசவாய் பிரஸ்" ஸிலவை அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ள நூல் மூற்றுய் செலவாகிவிட்டமையாலும்மறுமுறையும் அந்நூலையச்சிட்டுத்தரவேண்டுமென்று எம்மித்திரோத்தமர்கள் பல்காலும் கேட்டுக் கொண்டமையாலும் பாயிரமாதி நூலீராய் அச்சில் பதிப்பிக்கப் பட்டிருப்பதை கண்டு காண்க.

பாயிரம்—பஞ்சரத்தினம்

சாத்து கவி

நாகபட்டணம் மகா-ா-ஸ்ரீ ஹமீதுகூல்தான் ஆலிம் சாகிபவர்களியற்றிய

## பஞ்சரத்தினம்

கட்டளைக்கலித்துறை

விரிந்தவிலக்கணமாய்ந் துணர் வித்தகர்மெய்யறிவைத்
தெரிந்தவராருஞ் சிரங்கொள்ளச்செய்த விந்நூற்கவிகள்
கறுங்கிய சொல்லாற்பொருண்மிகு மாயுந்தொறுமறிவு
பரிவினி துண்டாந்துறவு நீருறல்போற்பார்ப்பவர்க்கே.

முன்மார்க்கஞ்சொல்லென்னச்சொன்னூர்க்கு மூதறிவாய்ந்தொழுக
சன்மார்க்கஞ்சொன்னேனை தன்றெனச் சாற்றியவர்க்கறியப்
பின்மார்க்க நூல்வழிகூறிப்பிறிதொரு நூலவர்வாய்த்
தன்மார்க்கங்கொள்ளாதடங்கி யொடுங்கத்தலக்கினனே.

சொல்லறிவாண்மைத்தொடை சீரெழுத்தின்சுவைபொருளும்
நல்லறிவாண்மையடி மோனையாப்பின் நயமுங்கொளிப்
பல்லறிவாண்மை பெறுநூலியற்றிப் பரவல்செய்தான்
புல்லறிவாண்மையர் சிந்தைப்பொருமை புறப்படவே.

நாஷனல் ஹைஸ்கூலில் நம்மிசுலாமத நாயகனே
வாசங்கமழ் நாகை வாழ்வன் அறபியல்வல்லவனே
ஆசமதுராவித்தாரமனைத்து மறைகுவனே
மாசறு காஜிகத்தீபுயர்முப்தி நல்மன்னவனே.

வெண்பா

## அகமதிப் ருஹீம் அபுல்கைறு ஆலிம்

அகமதிற்றேரு மறிவின்—றுருகு
சிறந்த நவாலங்கார மஞ்சரியின் சீர்த்தி
அறைந்திடலா மோகா மனந்து.

முற்றிற்று.

## நவாலங்கார மஞ்சரி

காப்பு வெண்பா

அனமின்னூ ரில்லாஹி ஆனஹதீ தெல்லாம்
இனமாயி யம்புகபி யின்மேல்—மனமுவந்து
பொற்கழலைப்போற்றிப் புகழோத யாறப்பு
எற்குநீ காப்பா விரு.

பண்

விண்ணிறைந்தப் புகழ்முழுது மிகப்பெறுமு ஹம்மதனூர்
பண்ணிறைந்த நன்மறையின் பண்போலிமார் அக்தாபு
கண்ணிறைந்தப் பதமலர்கள் கம்மிசையேற்றிப் பாக்கள்
மண்ணிறைந்த மாக்களுள மகிழுறயான் செப்புவனே.

(ஷாத ஷாத மானத்து என்றவாறு)

பதம்

வாருங்காரும் ஏழையைப் பாருந்தாருந்தானேயே
மக்கபதியே சொற்கதிதியே
மஹ்மூதே மனதிரங்குமே
வாது தீது அகலவே. வாருங்

வாடினேனே காடினேனே பாடினேனே யான்
மருவே தருவே குருவே திருவே மருகழற்குரும்
மதிமன்னரே துதிசொன்னனே
வந்தபுல்கைரைக்காருமே
வறுமை சிறுமை விலகவே வாருங்

முற்றிற்று.

(இஷ்கமேபேகல்ஹூ மனுஹருவா என்றவாறு)

### பதம்

பாதமே எனைக்கிரங்கித்தினந்தருவீர்—சொந்தப்
பையல்படுந் துயரம் நீக்கவருவீர்
நீதமுறு மக்காகோனே நித்தம்
நீரென்னையாளும் பூமானே
நெஞ்சமே அஞ்சதே நபி
சஞ்சலங்கள் தீர யான்
கெஞ்சிக்கெஞ்சிக் கூற பாதமே
சுந்தரப்புகழையான் சொன்னேன்நபியேவான்
சந்த்ரனழைத்த மன்மஹ்மூதா
தஞ்சம் தஞ்சம் தயைபுரியவாரும்
தமியேன் அஹ்மதுவைக் காரும் பாதமே

முற்றிற்று.

(மைபாஜாயிதில்கே லகாஞசே என்றவாறு)

செழுஞ் செங்கமலர்ப்பாதந் தாருமே அடியேன்
செய்தப்பவவினைகள் தீருமே செழுஞ்
எழுவான்கடந்தருஷில் ஏறிவசனித்தீரே
ஏங்கிநின்றப்பிணைக்கு இரங்கிப்பிணையானீரே
பழுதின்றி பொற்கரத்தாற் பாணிபொருத்தினீரே
பதுராதி படைமுழுதும் பயந்திடச்செய்தீர்கேரே
பாரினிற்பாக்களோதும் பையல் அபுல்கைரைநீர்
பண்பாய்க்கடைக்கணிக்கவாருமே செழுஞ்

முற்றிற்று.

(ஹிலமிலஜ ஒமாஜ ஒமாபை என்றவாறு)

பதம்

மனந்தினமயலாகுதே
வானமும் பூலோகமும்புகழ் நாடி வாடி
மக்காபதி மஹ்மூதே மாதவமுஹம்மதுவே — என்மனந்
மன்னரேசொன்னனே மாநிலந்தன்னில்
வந்தபுல்லு கரைநீர் சொந்தமாய்க்காரும்
மருவே திருவே ஒளிவே தெளிவே
குருவே தருவே தருணம்வரவே — என்மனந்

முற்றிற்று.

(ஹாயாமுஜே தர்தேஜிகர்னே சதாயா என்றவாறு)

பதம்

தோயாப்பதம் பூமேற் பாவிக்கருள் சகாயா
தொல்வினையோ எற்குவல்வினையோ
சொற்கபதியே சுகந்தாருநேயா — தோயா
துய்யரே நையறப் பையல்யானுய்யவே செய்வீரே
துயரதை நீக்கிநற் பெயரதைத் தாக்கநீர் வருவீரே
மெய்யுரை மறையதை ஐயமில் லவனியி லறைந்தீரே
மேலவர் பட்சமாய் மெச்சுமக் காதனி லுறைந்தீரே
மேகங்குடையிடு நாதா மேலருஷேறியநீதா
ஏகபரன்றிருத்தூதா எழில்பெறுமஹ்மூதா
என்மீதுளம் இரங்கி இகபரநற்கதிதாரும்
எங்கும்புகழ்ப்பறவே இட்சணமே பதந்தாரும்
ஏழை ஏழை அஹ்மதையாளுந்தயாளா
தாளைத்தாரும் மனக் கோழைத்தீரும்
காளைஹஷ்ரில் அருள்செய்யுந் தூயா — தோயா

முற்றிற்று.

(சத்தியான்சே சத்தியாமிலாவ் என்றவாறு)

பதம்

கமலப்பொற்பாதந் தாரும்—திரு
ஹபீபிறசூலே நபிஇறசூலே — கமல
அமரர்புகழ்மதீனு அதிபதிநீர்மெய்
கமழுநபியே பொற்பாதந்தாரும்
ஹபீபிறசூலே நபிஇறசூலே — கமல

வான்சென்றிறையோடு வசனித்த எங்கள்
வள்ளல் நபியே பொற்பாதந்தாரும்
ஹபீபிறசூலே நபிஇறசூலே கமல

திங்கடன்னைவரச் செய்து பின்போக்கிய
திவ்யநபியே பொற்பாதந்தாரும்
ஹபீபிறசூலே நபிஇறசூலே கமல

மாதவத்தோர் புகழ் மன்னரப்துல்லா
மகவே நபியே பொற்பாதந்தாரும்
ஹபீபிறசூலே நபிஇறசூலே கமல

அடியேனபுல்கைர் அஹ்மதை தினமும்
ஆளுநபியே பொற்பாதந் தாரும்
ஹபீபிறசூலே நபிஇறசூலே கமல

முற்றிற்று.

(திருச்சினஜாரியான் வாரிகட்டாரியான் என்றவாறு)

பதம்

தரிசனங்காண்பேனோ தாளிணைப்பெறுவேனோ யான்
சைதஹ்மதே தாளிணை யான்
இந்த்—தருணந்தயைபுரியு நாதா என்றும்
தமியேன்றுயரகற்று நீதா தரிசன

மயிலுருவாகினீர் மான்பிணை யாகினீர் சீர்
மன்னஹ்மதே மான் சீர்
செழு—மாமக்காவாழுஞ்செங்கோலா திரு
மறையோர்புகழு மறுகூலா தரிசன

நெஞ்சமிரங்குவீர் நேர்நோக்கி யாளுவீர் மா
நர்நயினாரே நேர் மா
நிதம்—தஞ்சமுபயப்பதந்தாரும் எங்கள்
தாவிம் நபியே முகம்பாரும் தரிசன

பொற்பாதந்தாருமே நற்கதிசேருமே நீர்
புகழ்ப்பெற நற் நீர்
கவி—சொற்குற்றம் போக்கும் விசுவாசா உயர்
சொர்க்கப்பதிக்கு பதிநேசா தரிசன

ஆசியானஆகிய அபுல்கைரு கூறியப் பா
அநுதினம் அபுல் பா
நல்—நேசம்வைத்தாளும்பிரகாசா என்றன்
நீசமகற்றும் உபதேசா தரிசன

முற்றிற்று.

(அலைகடல்சூழுலகினில்யானே என்றவாறு)

பதம் பல்லவி

பலகலை போற்றும் பயகாம்பர் காதா
பட்சம்வைத்தென்னைப் பார்த்தருள்நீதா

அநுபல்லவி

நலமுறுமக்கா நாயகவேதா
நபியேமுஹம்மது நறுமலர்ப்பாதா
உலைமெழுகதுபோல் உருகுதேநெஞ்சம்
உத்தமரேஎற்கு உதவி செய்தஞ்சம் பலகலை

மாண்பிணையாகிய மாதவக்கோனே
மாசறக்காத்திடும் மன்னர்பூமானே
நீண்பயிராக்கியத் திருமறைப்போதா
தீவினையகற்றிடும் சீர்மஹ்மூதா பலகலை

நாளைஜஜாவின் வேளையிலென்னை
நலமுடன்நற்கதி சேர்த்திடுமென்னே
தானைதந்தாளுவீர் தாஹிருநபியே
தருணம்தயைபுரியும் குருவேநற்ஷபியே பலகலை

மன்னரப்துல்லா மகிபதிபாலா
மாதிஹா அபுல்கைர்மகிழுஞ்செங்கோலா
கன்னன்மொழிப்பகரும் கருணைப்பிரபூபா
கவிப்பிழைபொறுத்தென்னைக் கார்மஹ்பூபா பலகலை

முற்றிற்று.

வெண்பா

தேனார்நா கூரென்னுந் தேயமதில் வந்தமர்ந்து,
மானார்கண் ணாள்முலையை மாய்த்தீந்த—கானாரும்,
காதிரோலி யுல்லாவின்காரணத்தையானுரைக்க,
நீதிபரனே துணை நீ.

பண்

முத்தி சுகந்தந்தாளும் முருஸல்மு ஹம்மதனார்
எத்திசையும் போற்றுமக ளேற்றமுறும்பாத்திமத்தின்
நித்திலகோர் சீர்ஹஸனார் நீதிநிறை மகன்வழியிற்
புத்திரராம் ஹஸன்குத்தூஸ் புகழ்மகனார் ஹமீதொலியே

(இலஅஜ்றஇஜா மோக்தல் என்றவாறு)

பதம்

திருகளினப்பதமேற்குத்
தினந்தருவீர் நீரருள்வீர் நீருள்வீர் நீரருள்வீர் நீர் திரு
தருபூக்கள் செறி நாகூர்
சாகுல்ஹமீதே காரிப்போதே காரிப்போதே காரிப்போதே கார் திரு

மருகமழுமாணிக்கப்பூர் மன்ஹஸன்குத்துஸ்
மாமகவே பூமகவே யானுய்யவே யானுய்யவே
யானுய்யவே யானுய்யவே யான் திரு

திருவாரூரின் றேர்சிறுத்தி சீற்புகழ்பெற்றீர்
திருமணியே நவமணியே தீர்வினையை தீர்வினையை
தீர்வினையை தீர்வினையை தீர் திரு

வஞ்சமார்ந்த இருடியைநீர் வண்டிஞல் வென்றீர்
வாடினேனே நாடினேனே பாடினேனே
பாடினேனே பாடினேனே பா திரு

கங்கைமீதிற் றுன்பமுற்ற வங்கத்தைக்காத்தீர்
காதிரேஇம் மாதிஹைநீர், ஆண்டருள்வீர் ஆண்டருள்வீர்
ஆண்டருள்வீர் ஆண்டருள்வீர் ஆன் திரு

ஆலமீதிலன்புடன்பா அஹ்மது சொன்னேன்
அருள்பெறவே பொருள்தரவே ஆசைக்கொண்டேன்
ஆசைக்கொண்டேன் ஆசைக்கொண்டேன் ஆசைக்கொண்டேன் ஆ திரு

நவாலங்கார மஞ்சரி முற்றிற்று.

இந்நூலாசிரியர் கோர்வைசெய்த அறபி கித்தாபுகளின் பெயர்களும், தமிழ்க்கிரந்தங்களின் பெயர்களும் பின்வருமாறு:—

(அறபி) 1. கஸீதாசெளனிய்யா, வானஷீதா ஒளனிய்யா.
2. கஸீதா ஸெளனிய்யா, வவும்தத்துல்கிரும்.
3. கஸீதா, மன்யுக்லி அன்ன.
4. ஜவாஜிருல்கபாயில்.
(தமிழ்) 1. தன்பீஹுத்தாலிஹீன்.
2. அல்புர்கானுல்ஜமீல்.
3. நவாலங்காரமஞ்சரி.
4. புகழ்ப்பாமஞ்சரி.

——:(o):——

இந்நூலாசிரியருக்கு பிதாவும், ஆசிரியரும், குருபதேசியும், நாகை மீராப்பள்ளி மதுரஸாவின்பிரதம உஸ்தாதுமாய்விளங்கின மெய்ஞ்ஞான சொருபர் அல்ஆரிபு பில்லாஹி மவுலாஞ, மவுலவி, முப்தி, அஃலாஹு ஜரத்து ஹாஜிசெய்யிது முகம்மது ஆலிம் சாஹிபு அவர்கள்பேரில், அவர்

களின் மாணாக்கர்களில் ஒருவரான, ம. ஹமீதுசுல்த்தான் ஆலிம் சாகிபு அவர்கள் சொல்லியது.

(விகசிதபதமலர் தந்தனுக்கிரேகம் செய்யும் என்ற ராகம்)

பதம் பல்லவி

சித்தமிரங்கி யுங்கள் திருவடிதாரும் ஹாஜி
செய்யித் முஹம்மதாலிம் ஸாஹிபுவே.

அநுபல்லவி

எத்தலத்தோரும் புகழ்ந் தேற்றுமிந் நாகைபதிக்
கிலங்குமோர் திலதமாய் வாழ்ந்தவர்க்கும்
சத்தன்றனை யறிதற்குற்ற மெய்ஞ்ஞானவழி
காட்டியகாமில் ஆலிம் சாஹிபுவே. சித்தம்

சரணங்கள்

உற்றஹதீதும் நஹ்வோடோதும்தப்ஸீர் பிகுஹம்
உண்மை ஹக்காயிக்குத்த ஸவ்வு பருலும்
நற்றவத்து றைமத்ஹப் நாவினில் மையுணர்த்தும்
நாயக செய்யிதாலிம் சாஹிபுவே சித்தம்

தன்னை தானறிந்தோன் றன் நாயன்றனையறிந்தா
னென்னுமொழிபோற் றன்னையறிந்ததற்கேற்ப
உன்னுமெய்ஞ்ஞானச்சுடருளத்திற் பூத்து ஜொலிக்கும்
உண்மை மஷாயிகாலிம் சாஹிபுவே உங்கள் சித்தம்

கனவிற் வீரத்தல் ஆரிப், கைதனிற்சொண்டு
கருத்த மீராவையிப்பக் காணவந்தேனென்
றினமாய் கூத்தூர்கத்தீபுக்கியம்பவன்றேரையிவர்க்
கெதிராக்கும் ஆரிப் ஆலிமசாஹிபுவே சித்தம்

உங்களிடத்திலிருந் தோதினருள்ளவர்க்கும்
உறுதியாய் பதினுங்கில் மையுமுணர்த்தீர்
சங்கையுறும் ஆலிமாய் ஷறஹின்முப்தியாயாக்கும்
தகையார் மூஹக்கிகாலிம் சாஹிபுவே சித்தம்

துறவறத்தியலுந் தோன்றுமில்லறமுந்
துணைகொண்டமல்புரி மெய்ஞ்ஞான குருவே
நிறைவுறுங் காரணமின் னுமனேசம்
நிகழ்த்தும் அல்லாமத்தாலிம் சாஹிபுவே சித்தம்

பார்பகழ் நாகை மீராப் பள்ளிமுதர்றிஸாய்
பண்பாயாவர்க்குங் கல்வியன்பாய் கற்பித்த
பேற்பெறும் வழிகாட்டும் நீதருஸ்தாதென்ன
நிகழ்த்தும் ஹமீது சுல்தான் துதிக்கும் சாஹிபுவே சித்தம்

முற்றிற்று.

## CERTIFICATE GRANTED BY

# THE HONB'LE SIR ABDUR RAHIM

### Kt. M. A. BAR-AT-LAW,

*Member Executive Council,*

CALCUTTA.

---

HIGH COURT OF JUDICATURE,
MADRAS.

I heard Mr. Khaji Mufthi K. S.Abul Khair Ahmed Ibrahim Alim Saheb deliver very fluent & eloquent address in Arabic & Tamil at the last session of the Nadwatul Ulema in Madras. He has considerable mastery over Arabic both spoken & literary & I understood from gentlemen conversant with Tamil that he passessed great knowledge over that language as well. I am of opinion that scholars like him if properly employed would be of greatest service to the Mohammedan Community of Madras as preachers & teachers.

(Sd). ABDUR RAHIM,
22—1—19.

# TESTIMONIALS.

NATIONAL HIGH SCHOOL, NEGAPATAM,
*30th April, 1908.*

Mr. Kaji Mufti Ahmed Ibrahim Alim Abulkhair Sahib is well known to me as the Mohamedan Religious Instructor of the National High School, Negapatam, for over three years. I have heard he is the son and and pupil of an eminently pious Guru, who was also a famous Arabic and Persian scholar. I have often attended to his teaching and held frequent conversations with him on questions of Mohamedan Religion and Ethics and been struck with the extent and depth of his learning. His teaching is clear and impressive. The wholesome effect of his instruction upon the tone and character of the Mohamedan pupils is quite perceptible.

His conduct is throughly respectable and satisfactory.

(Sd.) S. KRISHNASAMY IYER,
*Headmaster.*

---

H. H. THE MAHARAJA'S COLLEGE,
PUDUKHOTAH,
*December, 23rd 1910.*

Mowlavi Mufthi Khaji Abhul Khair Ahmed Ibrahim Alim Sahib is the instuctor in Mohomeden Religion in the National High School, Negapatam. When I was on the staff of this institution, I had considerable-nay daily-opportunities of forming my own impression of his scholarship, tastes, and pedagogic attainments. He is

the son of Mowlavi Mufthi Haji Syed Muhammed Alim Sahib—reputed savant who was approached, I am told, in his days for his opinions of controversial points of Islamic Theology, and whose decisions in most cases were highly respected and held final. I an glad to note that he is a chip of the old block. He is known to posses a sound knowledge of Arabic and well-versed in the standard books of his persuation. He is no "sir oracle", a charge that may be laid at the doors of some schoolmasters who love of pedantry has made them give themselves supercilious airs. He possesses a sweet temper and has a gentlemanly bearing about him. He is also a student of Tamil and can compose elegant verses to a turn. He has all the necessary qualifications of a successful schoolmaster with a clear analytical head, and a sweet persuasive temper; he has the knack-the rare faculty of interesting his class and I have seen many a time how the boys *en-rapport* did their lessons under his guidance. I am thoroughly convinced that the boys placed under his care would be benefited by his teaching and well-posted up in the principles of Islamism.

(Sd.) N. THIAGARAJA IYER,

M. A., L. T.,

*Lecturer in English.*

SCOTTISH BRANCH PRESS, NEGAPATAM. 25—72.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 3 | ப் | ம் |
| 4 | 27 | று | ரு |
| 7 | 10 | ணன் | ன்ன |
| 13 | 3 | ல | வ |
| 14 | 21 | ம | [illegible] |
| 19 | 10 | க | த |
| 20 | 22 | கோ | சா |
| 21 | 4 | கிர் | சிர் |
| 21 | 24 | க | ச |
| 22 | 21 | ழி | யி |
| 35 | 11 | க | ச |
| 37 | 10 | பெ | மெ |
| 37 | 33 | ப | பு |
| 38 | 15 | a | o |
| 39 | 8 | and and | and |
| 39 | 24 | Abhul | Abul |
| 40 | 3 | of | on |
| 40 | 5 | an | am |
| 40 | 10 | who | whose |